# மனைவியை நெற்றித்திலகமிட்டு போராட்டத்திற்கு அனுப்பிய கணவன் எம்வரலாற்றிலேயே உண்டு

எமது பழைய போராட்ட வரலாறுகளில் தமது மகனுக்கும், கணவனுக்கும் வெற்றித்திலகமிட்டு போருக்கு அனுப்பிய அன்னையர்களையே கண்டுள்ளோம். ஆனால் தனது மனைவிக்கு வெற்றித்திலகமிட்டு போராட்டத்திற்கு அனுப்பிய கணவனை இப்போதுதான் நாம் காண்கின்றோம். அவர்தான் அன்னை பூபதியின் கணவர் திரு. கணபதிப்பிள்ளை. இவ்வாறு நேற்று மாலை நல்லூரில் நடைபெற்ற அன்னை பூபதியின் நினைவுதின எழுச்சி நாள் விழாவில் பேசிய விடுதலைப் புலிகளின் மத்திய குழு உறுப்பினர் திரு. செங்கதிர் தெரிவித்தார். இவ்விழா யாழ். மாவட்ட விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் பொறுப்பாளர் திரு. ஸ்ரான்லி டொமினிக் தலைமையில் இடம்பெற்றது. பல்வேறு இடங்களில் இருந்துவந்த எழுச்சி ஊர்வலங்கள் நல்லூரில் நிறைவடைந்தன. வடக்கின் பல்வேறு பகுதிகளில் இருந்து வந்த பல்லாயிரக் — 8 ஆம் பக்கம் பார்க்க

பக்கங்கள் எட்டு    விலை ரூபா: 3-00

# முரசொலி

மலர் 04 இதழ் 74    வெள்ளி    20-04-1990    (சித்திரை 07)    ரமழான் 23

# வடமராட்சி யுத்தம்; இயக்க மோதல் இவைகளின் பின்னணியில் 'ரோ'

## முன்னரே தெரிந்திருந்தும் புலிகளை இந்தியா வடமராட்சியிலிருந்து அப்புறப்படுத்தியிருந்தது

தமிழீழத்தில் இடம்பெற்ற இயக்க மோதல்களுக்கும். வடமராட்சி லிபரேஷன் ஒப்பரேஷனுக்கும பின்னணியில் இந்திய உளவுப்படையான 'ரோ' இருந்தது என விடுதலைப புலிகளின அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம தெரிவித்தார்.

நல்லூரில் நேற்று நடைபெற்ற அன்னை பூபதியின் எழுச்சிக் கூட்டத்தில் பேசிய போதே அவர் இவ்வாறு கூறினார். அவர் மேலும் பேசுகையில்' 1983 இனக்கலவரத்தின் பின் இந்தியா தமிழர் பிரச்சனையில் இரு பரிமாணங்களில் தலையிட்டது- இராஜதந்திர பேச்சுகள் என்ற போர்வையில் கொழும்பில் ஒரு சமாதானப் பேச்சு வார்த்தையை நடாத்தியது. அதே சமயம் தமிழ் இயக்கங்களுக்கு ஆயுதங்களை வழங்கி இலங்கை அரசுடன் மோதவிட்டது.

வடமராட்சியில் தாக்குதல்களுக்கு திட்டமிடப்பட்ட போது அது எந்த நேரத்தில் எத்திகதியில் எவ்விதத்தில் நடைபெறும் என ரோ அறிந்திருந்தது. ஆனால் ரோ பொய்த் தகவல்களை எமக்குத் தந்தது இலங்கை இராணுவம் யாழ் நகரை தாக்கவுள்ளது. எனவே உங்கள் போராளிகளை யாழ் நகருக்கு நகர்த்துங்கள் என பொய்த் தகவல் தந்தது.



### வடமராட்சித் தாக்குதல்

வடமராட்சித் தாக்குதல்கள் ஆரம்பமான போது நாம் யாழ்ப்பாணத்தில் செயற்பாடுகளை அதிகரித்திருந்தோம் அப் — ஆ 08ம் பக்கம் பார்க்க

## ஈ. பி. ஆர். எல் எப் பினருடன் ரஞ்சன், ஹமீத் விரைவில் சந்திப்பு

வடகிழக்குப் பகுதிகளுக்கான பிரச்சனைகளை தீர்க்க பேச்சு வார்த்தைகளே ஒரேயொரு சிறந்த வழி என பாதுகாப்பு இணையமைச்சர் ரஞ்சன் விஜேரட்ன நேற்று நடைபெற்ற செய்தியாளர் மகாநாட்டில் தெரிவித்தார்.

ஈ. பி. ஆர். எல். எப் தமது நிலைப்பாடுகள் குறித்து எமக்கு கடிதம் எழுதியுள்ளனர். நானும் அமைச்சர் ஜனுப் ஏ, சி எஸ் ஹமீத்தும் விரைவில் அவர்களை சந்திக்கலாம் எனவும் அமைச்சர் ரஞ்சன் மேலும் குறிப்பிட்டார்.

## நம்பிக்கையின் அடிப்படையில் பேச்சுவார்த்தை



அன்று நடந்த பழைய பேச்சுவார்த்தைகளுக்கும். இன்று நாம் நடாத்தும் பேச்சுவார்த்தைகளுக்கும் இடையில் வேறுபாடு உண்டு, நாம் சமாதிகளுக்குப் பக்கத்தில், சாவுககு மத்தியில், கழுத்தில் சயினைற்றுடன் பேசுகின்றோம்.

இவ்வாறு விடுதலைப்புலிகளின் மக்கள் முன்னணி செயலாளர் நாயகம் யோகி நேற்று நல்லூரில் பேசுகையில் குறிப்பிட்டார். அவர் மேலும் பேசுகையில்

பழைய, புதிய தலைமுறைகளின் பேச்சுக்களுக்கு இடையில் வேறுபாடுகள் உள்ளன: அன்று எதையும் விடடுக் கொடுக்கத்தயாரான நிலையில் பேசினர் நாம் எதையும் விட்டுக் கொடுக்காத நிலையில் பேசுகின்றோம்

நம்பிக்கையின் அடிப்படையிலேயே பேச்சு நடக்கிறது. இன்றைய பேச்சின் முக்கிய பிரச்சனை குடியேற்றமாகும்.

அன்று 6வீதமாக இருந்த கிழக்கின் சிங்களவர்கள் இன்று குடியேற்றத்தால் 24 வீத மாகிவிட்டனர் ஐம்பது வீத நிலத்தையும் கிழக்கில் பிடித்துள்ளனர் என்றும் தெரிவித்தார்.

## வடகிழக்கு ஆளுநர் நளின் நேற்று யாழ் நகர் விஜயம்

நேற்றுக் காலை வடகிழக்கு மாகாண சபையின் ஆளுநர் லெப்டினன்ட் ஜெனரல் நளின் செனிவரத்தினவும் வடக்கு கிழக்கு மாகாண சபையின் பிரதமசெயலாளர் திரு. செ. கணேசநாதனும் பலாலிக்கு வந்து சேர்ந்தனர்.

எதிர் வரும் 22 ம் திகதி யாழ் செயலகத்தில் இடம் பெறவுள்ள புனர் வாழ்வு புனர — 8ம் பக்கம் பார்க்க

## செட்டிக்குளம் பொலிஸ் நிலையத்துக்கு மூடுவிழா

செட்டிக்குளத்தில் இயங்கி வந்த பொலிஸ்நிலையம் நேற்று முன் தினம் முதல் மூடப்பட்டு விட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

25 பொலிஸாரைக்கொண்டு புதிதாகத் திறக்கப்பட்ட இப் பொலிஸ் நிலையத்தை அகற்றுமாறு வவுனியா மாவட்ட விடுதலைப் புலிகள் பொறுப்பாளர் திரு. ... 8 ஆம் பக்கம் பார்க்க

## ஜே.வி.பிக்கு எதிரான நடவடிக்கை இன்று முதல் நிறுத்தம்

இன்றுமுதல் தென்னிலங்கையில் ஜே. வி. பி. யினருக்கு எதிரான தாக்குதல்கள் தேடுதல்கள் என்பனவற்றை இராணுவம் நிறுத்திவிடும் இத் தகவலைப் பாதுகாப்பு இணையமைச்சர் ரஞ்சன் விஜேரட்ன நேற்று அறிவித்தார்,

எனினும் ஜே வி. பி யினருக்கு எதிரான நடவடிக்கைகளில் பொலிஸார் தொடர்ந்தும் ஈடுபடுவர் என அமைச்சர் குறிப்பிட்டார்.

## மேலும் 1500 மலையகதமிழருக்கு பொலிஸ் ஆட்சேர்ப்பில் வாய்ப்பு

இந்திய வம்சாவளியினரான "மலையகத்தவரில் மேலும் 1500 பேருக்கு பொலிஸ் இலாகாவில் வாய்ப்பு அளிக்கப்படவுள்ளது" என்று இலங்கைத் தொழில் துறை ராஜாங்க அமைச்சர் திரு எம் எஸ் செல்லச்சாமி நேற்றுத் திருச்சியில் வைத்துத் தெரிவித்தார்.

இந்திய ... இலங்கைக் கலாச்சாரப் பேரவை திருச்சியில் — 8 ஆம் பக்கம் பார்க்க

## நாவாந்துறைப் பகுதியின் குடிநீர்ப் பிரச்சனை தீர்க்கப்படும்

நாவாந்துறை வசந்தபுர பகுதியில் நிலவிவரும் மோசமான குடிநீர்ப் பிரச்சனைக்கு விரைவில் தீர்வு காணப்படவுள்ளது.

இப்பகுதியில்வெகுவிரைவில் 500 கலன் கொள்ளளவு கொண்ட நீர்த்தாங்கி ஒன்று அமைக்கப்படுமென யாழ் மாநகர சபை ஆணையாளர் திரு, வி. பி. பாலசிங்கம் தெரிவித்துள்ளார்.

இந்தப்புதியதிட்டம் அண்ணா சனசமூக நிலையத்தாருடன் இணைந்தே நடைமுறைப் படுத்தப்படவுள்ளது. இத்திட்டம் பூரணவெற்றியளிக்குமாயின் குடிநீர்ப் பிரச்சனையுள்ள மற்றையபகுதிகளுக்கும் இது விஸ்தரிக்கப்படும். (03)

### உள்ளே

ஒரே வாரம் இக் குடும்பத் திற்கோ பெரும் பாரம்...

3 ம் பக்கத்தில்

புங்குடுதீவு, பாணாவிடை சிவன்தேவஸ்தான தேர்த் திருவிழா சிறப்பிதழ்

4 ஆம் 5 ஆம் பக்கங்களில்

## பொலிஸ் அதிகாரிகள் நியமனம்

வட மகாணத்திலுள்ள பல பொலிஸ் நிலையங்களுக்குப் புதிய பொலிஸ் பொறுப்பதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

தலைமைப் பொலிஸ் நிலையங்களான மன்னாருக்கு திரு எம். மோசனதாஸ், கிளிநொச்சிக்கு திரு வே. அரசரத்தினம், யாழ்ப்பாணத்துக்கு திரு சந்திர மோகன், காங்கேசன்துறைக்கு திரு. சுதேசநாதன் முல்லைத்தீவுக்கு திரு ரி. ஜெயக்குமார் மாங்குளத்துக்கு திரு: குகதாசன் ஆகியோர் நியமிக்கப்பட்டிருக்கின்றனர்.


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

### பதவி வெற்றிடங்கள்

பின்வரும் பதவிகளுக்கு பொருத்தமான விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் 1990-05-17ஆம் திகதி வரை என்னால் பெற்றுக் கொள்ளப்படும்.

1. தற்காலிக உதவி விரிவுரையாளர்
தாவரவியல்
இரசாயனவியல்
கணிதமும் புள்ளிவிபரவியலும்
விலங்கியல்
பௌதிகவியல்

2. தற்காலிக செய்முறை காட்டுநர்
தாவரவியல்
இரசாயனவியல்
விலங்கியல்
பௌதிகவியல்

3. தற்காலிக போதனாசிரியர்
கணிதமும் புள்ளிவிபரவியலும்

இவ்வாண்டில் இறுதிப் பரீட்சைக்குத் தோற்றுபவர்களும் விண்ணப்பிக்க முடியும். இப்பல்கலைக்கழகத்தின் தாபனக்கிளையின் சிரேஷ்ட உதவிப் பதிவாளரின் அலுவலகத்தில் கிடைக்கக் கூடிய படிவங்களில் விண்ணப்பங்கள் செய்யப்படல் வேண்டும்.

தபால்மூலம் படிவங்களைப்பெற விரும்புவோர் சுயமுகவரியிட்டு முத்திரையொட்டப்பட்ட 23×10 ச.மீ அளவுடைய கடித உறையை அனுப்புதல் வேண்டும். விதிக்கப்பட்ட படிவங்களில் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மாத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும்.

அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகளிலுள்ள விண்ணப்பதாரிகள் தமது நிறுவனங்களின் தலைவர்களின் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்.

பதிவாளர்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1990-04-18.

04189


## போதைவஸ்து ஓவியபோட்டியில் வெற்றிபெற்றோர் விபரம் அறிவிப்பு

யாழ். லயன்ஸ்கழகம் நடாத்தி 'போதை வஸ்து' ஓவியப் போட்டியில் வெற்றி பெற்றோர் விபரம் அறிவிக்கப்பட்டுள்ளது.

முதலாம் இடம்– 'மனிதா மரணத்தை நீயாக நாடாதே' செங்குட்டுவன் - கொக்குவில் இந்துக் கல்லூரி.

இரண்டாம் இடம் – 'பெண்ணே நீயுமா! நீயுமா?' தில்லைக்கரசி முத்துத்தம்பி– மானிப்பாய் மகளிர் கல்லூரி

மூன்றும் இடம்– 'உயிர்த் துடிப்புக்கும் போதைவஸ்தா?' எஸ் சசிதரன் கொக்குவில் இந்துக்கல்லூரி.

பரிசில்கள் வழங்குவதற்கான விபரங்கள் மாணவர்களுக்குக் கல்லூரி அதிபர்கள் மூலம் அறிவிக்கப்படும்.

யாழ்- லயன்ஸ் கழகம் மேற்படி போட்டியில் பங்குபற்றிய சகல மாணவர்களுக்கும் மற்றும் அவர்களுக்கு உற்சாகம் வழங்கிய ஆசிரியர்கள், நடுவர்களாகக் கடமையாற்றியோர் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துள்ளது.

### நாதஸ்வரக் கலைஞர்

## கே. ஆர். சுந்தரமூர்த்திக்கு இணுவிலில் பாராட்டு விழா

நாதஸ்வர வித்துவான் கே. ஆர் சுந்தரமூர்த்தியின் 35 ஆண்டு கால இசைத்துறை சேவையைப் பாராட்டி இணுவில்-மஞ்சத்தடி ஸ்ரீ அருணகிரிநாத ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி தேவஸ்தானம் பாராட்டு விழாவொன்றை ஏற்பாடு செய்துள்ளது

21ஆம் திகதி மாலை 6.30 மணிக்கு மஞ்சத்தடி ஸ்ரீ அருணகிரிநாத சிவசுப்பிரமணிய சுவாமி தேவஸ்தான மண்டபத்தில் நல்லூர் உதவி அரசாங்க அதிபர் ஆ. மகாலிங்கம் தலைமையில் இவ் விழா நடைபெறும்.

மஞ்சத்தடி சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் செயலர் பெ. கனகசபாபதி நிகழ்ச்சியில் வரவேற்புரை நிகழ்த்துவார், சங்கீதபூஷணம் பொன் சுந்தரலிங்கம், இயல் இசை வாரிதி பிரம்ம ஸ்ரீ ந. வீரமணி ஐயர், நாதஸ்வர வித்துவான் என். கே. பத்மநாதன், பண்டிதர் சபா ஆனந்தர், பிரம்ம ஸ்ரீ த மகாதேவா குருக்கள், சோ. பத்மநாதன் ஆசிரியர், கம்பன் கழக அமைப்பாளர் இ. ஜெயராஜ் ஆகியோர் நிகழ்ச்சியில் பாராட்டுரை வழங்குவர், பரிபாலன சபை உறுப்பினர் கா. வயித்தீஸ்வரன் நன்றியுரை நிகழ்த்துவார்.

## கணக்குப்பதிவாளர் சங்கம் அமைப்பு

உள்ளூராட்சிச் சேவை தமிழ் கணக்குப் பதிவாளர். சங்கத்தின் அங்குரார்ப்பணக்கூட்டம். அண்மையில் யாழ் மாநகரசபை கணக்குப் பகுதியில் நடைபெற்றது பின்வருவோர் புதியநிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவர். திரு. பி சின்னத்துரை. உபதலைவர்: திரு. கோ. கௌஸ்துபமணி செயலாளர்: இ. க. இராஜேஸ்வரன். உப செயலாளர்; வே ம சுப்பிரமணியம். பொருளாளர்: க. பலராமன்: நிர்வாகக்குழு உறுப்பினர்களாக அறுவர் தெரிவு செய்யப்பட்டனர்.

## உடல் உளப்பாதிப்பு

அமெரிக்கக் குழந்தைகள் தமது வாழ்நாளின் பெரும் பகுதியை ரீவி பார்ப்பதிலும் படுத்துத் தூங்குவதிலுமே கழிக்கின்றனர்.

இதனால் அக் குழந்தைகள் உடல் உளரீதியான பாதிப்புக்களை அடைகின்றனர் என அமெரிக்க செய்திகள் கூறுகின்றன வேறு எவ்வித செயற்பாடுகளிலும் ஈடுபடாது பெரும்பாலான நேரத்தை ரீவி பார்ப்பதில் மூழ்கிப்பதனால் அக்குழந்தைகளின் உடல் பருமன் அடைவதோடு உள்ளத்தில் வன்முறை உணர்வுகளும் பெருகி விடுகின்றனவாம்,

## கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டி

மாதகல் பங்கு கத்தோலிக்க இளைஞர் ஒன்றியத்தினால் நடாத்தப்படும் மரணித்த அன்ரனி அரியதாஸ் அவர்களின் ஞாபகார்த்த வெற்றிக் கேடயத்துக்கான நான்கு பேர் கொண்ட பழைய முறையிலான கரப்பந்தாட்டப் போட்டிகளில் பங்கு பற்ற விரும்பும் கழகங்கள் எதிர் வரும் 30-ம் திகதிக்கு முன்பாக மேற்படி ஒன்றியத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கோரப்படுகின்றது.


சிறு விளம்பரம்

தேவை

சீமெந்து வெற்று பாக்குகள் கோழித்தீன் பாக்குகள் தேவை மில்க்வைற் யாழ்ப்பாணம். 04193



## கொம்பியூட்டர் கல்வி

1. BASIC LANGUAGE
மிகவும் பிரபலமான இலகுவில் பயிலக்கூடிய கொம்பியூட்டர் மொழி.
4 மாத கால Week - day / Week-end வகுப்புகள்

2. dBase III +
உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் தொழில் வாய்ப்புக்களை எதிர் நோக்குபவர்களுக்கு இந்தப் பயிற்சி மிகவும் பயனளிக்கும்.
2½ மாத கால Week-day / Week-end பயிற்சிகள்

3. LOTUS-1, 2, 3
கணக்கியல் துறைக்கு மிக உபயோகமான பயிற்சி
2 மாத கால Week - day/Week - end பயிற்சிகள்.

4. WORD PROCESSING
கல்வி, வேலை நோக்கோடு வெளிநாடு செல்பவர்களுக்கு இந்தப் பயிற்சி மிக உகந்தது.
2 மாத கால Week - day/Week-end பயிற்சிகள்.

* LECTURES BY MEMBERS OF INSTITUTE OF DATA PROCESSING MANAGEMENT (London)
* PRACTICALS ON I. B. M (COMPATIBLES)
* MORE HOURS OF PRACTICALS
* தமிழிலும் விளக்கங்கள்
* கட்டணத்தைப் பகுதிபகுதியாகச் செலுத்தலாம்
* பயிற்சி முடிவில் பெறுமதி வாய்ந்த சான்றிதழ்

புதிய வகுப்புகள்: 23. 04. 1990 முதல் ஆரம்பம்

School of Business Administration
(Leaders in Computer Education)

16 3 ஆம் குறுக்கு வீதி.
(OLR) தேவாலய மேற்குப் பக்கம்)
யாழ்ப்பாணம்

04195



வியாபாரம் பெருக விளம்பரம் செய்க



## "தொழிற் பயிற்சிகள்"

* COMPUTER PROGRAMMING & DATA PROCESSING IN BASIC LANGUAGE
60 மணித்தியால செய்முறைப் பயிற்சியுடன் பயிற்சியளிக்கப்படும்.
காலம்:- 4 மாதம்.

* றேடியோ, ரெலிவிஷன் வீடியோ டெக் றிப்பயறிங்
ரெலிவிஷன், றேடியோ, வீடியோ டெக், திருத்தும்முறை ஆரம்பத்தில் இருந்து பயிற்சியளிக்கப்படும்.
காலம் : 4 மாதம்

* ENGINEERING DRAWING
பொறியியல் பீடமாணவர் மட்டும் அனுமதிக்கப்படுவர்.

* றீவைண்டிங்
மின் மோட்டர், மின் விசிறி, ரான்ஸ்போமர் றீவைண்டிங் செய்தல் பயிற்சியளிக்கப்படும்.

* எலெக்றிக்கல் வயறிங்
வீட்டுமின்சாரவேலை, மின்சாரப்பொருட்கள் திருத்துதல் பயிற்சியளிக்கப்படும்
காலம்-: 2 மாதம்

* DIPLOMA IN DRAUGHTSMANSHIP
காலம் 4 மாதம்

பயிற்சிகள் ஆரம்பம்: 23.04.90 [கிழமை நாட்கள்]
21.04.90 [சனி ஞாயிறு]

JAFFNA TECHNICAL INSTITUTE

ஸ்ரான்லிவீதி, (றெயில்வேகடவை அருகாமையில்) யாழ்ப்பாணம்

04169

## யாழ். பொது நூலகம்

1981 ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதலாம் திகதி தமிழ் மக்கள் வாழ்வில் ஓர் பேரிழப்பான நாளாகும்.

இலங்கைப் படையினரால் தமிழ் மக்களின் பெரும் சொத்தான யாழ்.பொது நூல் நிலையம் எரியூட்டப்பட்ட தினமாகும்.

யாழ் பொது நூலகம் எரிந்து எட்டு வருடங்களாகி விட்டன.

இன்னமும் அதைப் புனர் நிர்மாணம் செய்வது குறித்து எவரும் நடவடிக்கை எடுத்ததாகத் தெரியவில்லை

யாழ்.மாவட்ட மக்கள் மட்டுமல்லஇலங்கை வாழ் சகலருமே யாழ் பொது நூலகத்தால் பயனடைந்திருந்தனர்.

பெரும் அறிஞர்களையும், விஞ்ஞானிகளையும், பட்டதாரிகளையும், புலவர்களையும் உருவாக்கிய பெருமை இந்த நூல் நிலையத்திற்கு உண்டு.

பொது நூல்நிலையம் எரியுண்டதைக் கேட்டதும் அருட் திரு தாவீது அடிகள் மாரடைப்பால் மரணமானார்.

பத்துக்கு மேற்பட்ட மொழிகளில் பாண்டித்தியம் அடைந்திருந்த அவருக்கே யாழ் பொது நூலகத்தின் பயன்பாடும், பெருமையும் தெரியும்.

ஒரு இலட்சம் நூல்களையும், ஏட்டுச் சுவடிகளையும் யாழ்.பொது நூல் நிலையம் கொண்டிருந்தது.

## இதயநாதம்

வெள்ளிக்கிழமை 20-04-1990

நல்வாக்கு

தொலை தூரத்திலிருந்து வரும் ஒருவர் நன்றாகப் பொய் பேசலாம்.

- பிரெஞ்சு முதுமொழி

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

ஆசியாவின் மிகச் சிறந்த பெரிய நூல் நிலையமாக இது விளங்கி வந்தது.

இதை எரியூட்டியதால் எமது மாணவர்கள் இழந்தவை கொஞ்ச நஞ்சமல்ல

இந்த நூல் நிலையத்தைக் கட்டுவதற்கான பெரும் பங்கு அருட்திரு லோங் அடிகளாரையே சாரும்.

இவர் அப்போது யாழ். புனித பத்திரிசியார் கல்லூரியின் அதிபராகக் கடமையாற்றியவர்.

இவரது நினைவாக இலங்கை அரசு இந்த வருடம் தபால் முத்திரை ஒன்றை வெளியிடவுள்ளது.

இவரது சேவையில் முக்கிய பங்காக எடுத்துள்ள யாழ்.பொது நூல் நிலையம் இல்லாத நிலையில் இவருக்கு முத்திரை வெளியிடுவது மனவேதனையைத் தருகிறது.

இவரது சேவைக்கு முத்திரை வெளியிட்டுக் கௌரவிக்க வேண்டியது மிகமிக அவசியமாகும்.

அதே சமயம் அவரது உழைப்பால் உருவான நூல நிலையத்தை மீள உருவாக்குவதே அவருக்கு நாம் வழங்கும் முதல் கௌரவமாகும்.

அவருக்கு முத்திரை வெளியிடும் இவ் வருடத்திலாவது யாழ் பொது நூலகத்தைப் புனரமைப்பதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும்.

தற்போது யாழ்.பொது நூல் நிலையம் எரியுண்ட நிலையில் ஒரு வரலாற்றுச் சான்றாகக் காட்சியளிக்கிறது.

இதை மீளத் திருத்தியமைக்காது; அப்படியே ஓர் வரலாற்றுச் சான்றாக வைத்திருப்பதும் நல்லதே.


அதே சமயம் புதியதோர் நூல் நிலையம் ஓர் வசதியான இடத்தில் உடன் கட்டப்படவேண்டியதும் அவசியமாகும்.

எமது எதிர்காலச் சந்ததியினரின் நல்வாழ்வைக் கருத்திற் கொண்டுள்ளோர் இதனை உடன் கவனத்திற் கொண்டு யாழ். பொது நூல் நிலையத்தை மீள அமைக்கும் பணியை உடன் மேற்கொள்ள வேண்டும்.

இந்தக்கதை சோகக்கதை.... நெஞ்சுக்குள்ள நிக்கிற .... இந்தக் கதை சோகக்கதை.....

# ஒரே வாரம்.. இக்குடும்பத்திற்கோ

# பெரும் பாரம்; துயர் ஒதுங்குமா ஓரம்?



வாழ்க்கையிலே சோதனைகள் வருவது இயற்கை தான். ஆனால் தொடராக ஏற்படுகின்ற சோதனைகளை எப்படித் தாங்க முடியும். எதையும் தாங்கும் தன்மையை எல்லோரிடமும் நாம் எதிர்பார்க்க முடியுமா?

சோதனை மேல் சோதனை போதுமடா சாமி என்று வேதனைப் பெருமூச்சு விடுபவர்கள் தான் அதிகம். சோதனைகளைத் தாங்கும் இதயம் தேவை என்று வேதாந்தம் பேசலாம். அந்த வேதனைகள் சோதனைகள் எமக்கு ஏற்படும் போது வேதாந்தங்கள் மூலைக்குள் ஒதுக்கப்படுவது இயற்கையே

கடந்த பதினொராம் திகதி கோட்டைப் புகையிரத நிலையத்தில் பரந்தனுக்கு ரிக்கட் பெற்றுக் கொண்டு கார்மேகம் என்ற 27 வயது இளைஞரும், சந்திர குமார் (9 வயது), ரமேஷ்குமார் (8வயது) ஆகிய சிறுவர்களும் இரவுத் தபால் புகையிரதத்தில் புறப்பட்டனர்.

அன்றைய இரவுத் தபால் புகையிரதத்தில் மூச்சு விட முடியாத அளவுக்குச் சனக் கூட்டம். புதுவருடக் கொண்டாட்டத்தை வீடுகளில் மகிழ்ச்சியாகக் கொண்டாட பொது மக்கள் ஏட்டிக்குப் போட்டியாக யாழ்ப்பாணம் நோக்கிப் பயணம் செய்தனர்.

கொழும்பு கொட்டாஞ்சேனையில் உள்ள வொண்டலை சோப் கம்பனியில் ஊழியராகக் கடமையாற்றும் பரசுராமன் கார்மேகம் என்ற இளைஞர் தாய் தந்தையருடன் புதுவருடக் கொண்டாட்டத்தை மகிழ்ச்சியாகக் கொண்டாடப் புறப்பட்டவர்

புதுவருடக் கனவுகள் அலைமோத அவர் உற்சாகமாக மாமனாரின் பிள்ளைகளைப் பரந்தனைச் சுற்றிக்காட்ட கையோடு அழைத்து வந்தார்.

'காலன்' புதுவருடக் கொண்டாட்டத்தில் தாய் தந்தையரோடு பங்கு கொள்ளக்கூடாது என்று முற்கூட்டியே தீர்மானித்து விட்டான் என்ற விஷயம் அந்த இளைஞருக்கு எப்படித் தெரியும்.

> “ரயிலில் பயணம் செய்யும் வாலிபர்களே இந்தச் சோகக் கதையைப் படியுங்களேன்”
>
> —புகையிரத நிலைய அதிபர்

இரவுத்தபால் புகையிரதத் மாகோ புகையிரத நிலையத்தில் நிற்கிறது. கார்மேகம் தனது இரண்டு சிறிய மைத்துனர்களின் தண்ணீர்த் தாகத்தைத் தணிப்பதற்காக புகையிரத நிலையத்திலுள்ள தண்ணீர்ப் பைப்பில் தண்ணீர் எடுக்கிறார் புகையிரதம் புறப்படுகிறது.

அவசர அவசரமாக ஓடி வந்து ஏறுகிறார். உள்ளே இருக்கும் இரு சிறுவர்களிடம் தண்ணீர்ப் போத்தலை ஜன்னலால கொடுக்கிறார்.

'எங்கட மச்சான்...... தண்ணீர்ப் போத்தல...... தந்தார்...... அதுக்குப் பிறகு நாங்கள்...... மச்சானைக் காணயில்லை'......


தண்ணீர் கொடுத்த கார்மேகம் எங்கே? அவருக்கு என்ன நடந்தது?...... கண் மூடித்திறக்குமுன்னே சம்பவம் நடந்து முடிந்து விட்டது.

அதே புகையிரதத்தில் பயணம் செய்த கொழும்பில் கடமைபுரியும் மிருசுவிலைச் சேர்ந்த வாலிபர் விநோ செல்வரட்ணம் இப்படிச் சொன்னார்.

மாகோ புகையிரத நிலையத்தை விட்டு புகையிரதம் புறப்பட்டதும் அவசரமாக ஏறிய இந்த இளைஞர் கதவிலே உள்ள கைப்பிடியைப் பிடித்தவாறு வெளியே தொங்கிக் கொண்டிருந்தார்.

சிறிது யார் தூரத்தில் இருட்டில் பாலம் இருப்பது அந்த இளைஞருக்கு தெரிய வந்தது. பாலத்தில் மோதப் போகிறேனே என்ற பயத்தில் பாலம் வரமுன்னரேயே அந்த இளைஞர் கையை விட்டு விட்டார். அம்மா என்ற அவலக் குரல் மட்டுமே எனக்குக் கேட்டது. நான் அபாயச் சங்கிலியை இழுத்தேன். ஆனால் புகையிரதம் நிற்கவில்லை......

அடுத்த புகையிரத நிலையத்தில் புகையிரதம் நின்றது. சாரதியிடம் முறைப்பாடு செய்தோம். புகையிரத சாரதி அதைப்பற்றி அக்கறை காட்டவில்லை...... இரவுத்தபால் புகையிரதம் தனது பயணத்தைத் தொடர்ந்தது'



எதுவுமே அறியாத அப்பாவிச்சிறுவர்கள் எங்கு போகிறோம் என்று தெரியாத நிலையில் பயணத்தைத் தொடர்ந்தார்கள்......

இரவுத்தபால் புகையிரதம் புறப்பட்ட பின் வந்த மற்றொரு புகையிரதம் விழுந்து இறந்த இளைஞரின் சடலத்தை எடுத்துக் குருநாகல் வைத்தியசாலையில் ஒப்படைக்க உதவியது.

சில மணிநேரங்களில் நடந்த சம்பவம் பற்றி எவருக்குமே எதுவும் தெரியாது.

பன்னிரண்டாந் திகதி அதிகாலை வேளை இரவுத்தபால் புகையிரதம் யாழ். புகையிரத நிலையத்தை வந்தடைந்தது. இந்த இரண்டு சிறுவர்களும் தாமாகவே கார்மேகத்தின் சிறிய ரவலிங் பாக்கையும் எடுத்துக் கொண்டு யாழ். புகையிரத மண்ணை மிதித்தார்கள்.

பிள்ளைகளை அழைத்துச் செல்ல முயன்றனர்.

புகையிரத நிலைய அதிபர் இதற்கு இடமளிக்காததால் தொடர்ந்து புகையிரத உத்தியோகஸ்தர் வீட்டில் இரு பிள்ளைகளும் பராமரிக்கப் பட்டார்கள்.

புது வருடம் பிறந்தது...... பெற்றோர் வரவில்லை......... புகையிரத நிலைய உத்தியோகஸ்தர் இப்பிள்ளைகளுக்கு தமது செலவிலேயே புத்தாடை வாங்கிக் கொடுத்துப் புத்தாண்டை அவர்களுக்கு மகிழ்ச்சியாகக் கொண்டாட வாய்ப்பளித்தார்...... அவரது பெருந்தன்மையை பாராட்டாமல் இருக்க முடியாது. மாற்றான் பிள்ளையைத் தன் பிள்ளையாகக் கருதும் நிலை எல்லோருக்கும் வருவது மிக மிகக் குறைவு

பிள்ளைகளை அழைத்துச் செல்ல ஒருவரும் வராததால்

**வி.என்.எஸ்.உதயசந்திரன்**

யாழ். புகையிரத நிலையத்தில் அனாதரவாக நின்ற இந்த இரண்டு சிறுவர்களைப் புகையிரத நிலைய அதிபர் மயில்வாகனத்தின் அனுமதியோடு புகையிரத நிலையத்தில் கடமையாற்றும் பாதுகாப்பு உத்தியோகத்தர் சோதிடராஜா தமது வீட்டுக்கு அழைத்துச் சென்று பராமரித்தார்.

பத்திரிகைகளுக்கு செய்தி கொடுத்தார்கள். முரசொலி பத்திரிகை இச் செய்தியை தெளிவாகப் பிரசுரித்து இருந்தது. பத்திரிகையில் வெளிவந்த செய்தியை படித்தசிலர் தாம் இரு பிள்ளைகளையும் பொறுப்பு எடுக்க முயன்றனர் சிலர் இருபிள்ளைகளையும் வேலைக்காரப் பிள்ளைகளுக்கு பயன்படுத்தலாம்என எண்ணி

இந்த உத்தியோகஸ்தர் கொழும்பு பயணமானார்...... ஊர்கொடவத்தை முழுவதும் தேடி தாய் தந்தையரைக் கண்டுபிடித்து கடந்த 17ம் திகதி காலை யாழ்ப்பாணம் அழைத்து வந்தார்.

யாழ்ப்பாணம் வந்த தாய் தந்தையரான ருக்கராசா கமலம் ஆகியோரிடம் ஏன் இவ்வளவுநாளும் உங்கள் பிள்ளைகளைத் தேடவில்லை என்று கேட்டதற்கு............இரண்டு பிள்ளைகளின் தந்தையான ருக்கராஜா கண்கலங்க.........இவர்கள் பரந்தன் புறப்பட்ட மறுநாள் எனது அண்ணரான கோவிந்தசாமி இறந்து விட்டார்.

இவரது மறைவுச் செய

— 7 ம் பக்கம் பார்க்க

ஈழத்து இரா

# புங்குடுதீவு பாணுவிடை

# தேர்த் திருவிழ


தேரேறிவரும் சிவனாரே நின் திருவடி தொழுதோம்
தொல்லையெல்லாம் அகற்றிடுவீரே.

**ஸ்ரீலக்ஷ்மி அச்சகம்**

222 (76) ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

கிளை; 37 கண்டி வீதி, சுண்டுக்குளி,

யாழ்ப்பாணம்

நாளும் நம்பினோர்க்கு நல்லருள் தருபவன்
நாடு போற்றும் பாணாவிடை அரனே

**ஏ. ஆர். எஸ் & பிறதர்ஸ்**

பலசரக்கு மாளிகை

இருபாலை றோட்

கோண்டாவில் கிழக்கு

கோண்டாவில்

திக்கெல்லாம் போற்றத் தேரேறிவரும்
சிவனைத் தொழுதெழச் சிங்கார வாழ்வு வருமே

**ஊரதீவு சனசமூக நிலையம்**

**ஊரதீவுதமிழ் மாதர் கழகம்**

**புங்குடுதீவு இளந்தமிழர் மன்றம்**

'அறிவகம்'

புங்குடுதீவு

பாரெலாம் போற்றும் பாணாவிடையானைப்
பரவிப் பணிந்து பல பயன் பெறுவீரே

**சிவா ஸ்ரோர்ஸ்**

(மொத்த சில்லறை வியாபாரம்)

209 ஆஸ்பத்திரி வீதி

யாழ்ப்பாணம்

நாவுக்கரசரிக்கு நற்குருபூசை
நாடு போற்றச்செய்யும் நற்பதி
நல்லவர் போற்றும் பாணாவிடைப்பதியே

**அருமை போசனசாலை**

NO, 10; ஜும்மா லேன்

யாழ்ப்பாணம்


## ஆலய வளர்ச்சி!!!

இராமபிரானால் ஸ்தாபிக்கப்பட்டு பூசிக்கப்பட்ட உலக ஈஸ்வரம்.–"இராமேஸ்வரம்" இங்கு உள்ள இறைவியதும் இறைவனதும் பெயர் பர்வத வர்த்தனி உடனுறை இராமலிங்கேஸ்வரர் இத்திருத்தலத்தை 1911-ம் ஆண்டில் பூசித்து நின்றவர் சிவக்கன்று மருதப்ப சுவாமி அவர்கள் அன்னாருக்கு இராமலிங்கேஸ்வரரிடமிருந்து கிடைத்த உத்தரவு-பணிப்புரை 'புங்குடுதீவு பாணாவிடை அப்பனிடம் போ...' என்பதாகும், தான் தோன்றீஸ்வரமாக - ஐயனார் என வழங்கப்பட்ட பாணாவிடை என்றும் பழம்பதிக்கு இறைவன் பணிப்புரை ஏற்று-பணியேற்றார் சுவாமிகள். அமரர் திரு. முத்தர் என்னும் கிராமப் பெரியாராக மண்ணிலே - கொட்டைக் கோவிலாக இருந்த தான் தோன்றீஸ்வரத்தை மடாலயமாக்கி அப்பர் குருபூசையை 78 ஆண்டுகளுக்குமுன் ஆரம்பித்தார் சுவாமிகள். அமரர் திரு. மதியாபரணம் அவர்களும் சுவாமியின் பணியுடன் இணைந்து கொண்டார். இருவரது ஆசிர்வாதத்துடனும் 1947-ல் அமைக்கப்பட்ட ஆலயபரிபாலன சபையின் தலைமைப்பதவியை ஏற்றார் அமரர் திரு. ஆ. மாணிக்கம் அவர்கள். அச்சபை மடாலயத்தை இடித்து ஆகமவிதிக்கு சிறப்பு அம்சங்களை பின்னணியாக கொண்டு திட்டமிட்டு அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது.

1948-ன் பின் வந்த ஆலய நிர்வாகிகளும் ஆலயத்தில் பல திருப்பணிகளை நிறைவேற்றியுள்ளனர். காலத்திற்குக்காலம் 1983-ம் ஆண்டில் இரண்டாவது வரலாற்று நிகழ்ச்சியினை பதித்தவர் ஆலய புனராவர்த்தன இரண்டாவது கும்பாபிடேகத்தை நடத்திய சட்டத்தரணி திரு. எஸ். கே. மகேந்திரனது தலைமையிலான நிர்வாகிகள். அவர் பின் கடந்த மூன்று ஆண்டுகளாக அடியெனது பணியின் கீழான நிர்வாகத்திடம் ஆலயம் வழங்கப்பட்டது இக்காலப்பகுதிய வளர்ச்சியினை எண்ணிப்பார்க்கும் பொழுது ஆலயம் நிரந்தரஒலி வசதி பெற்று அதிகாலையில் கிராம மக்கள் இறை ஒலியுடன் எழுந்திருக்க வசதி செய்யப்பட்டுள்ளது. அம்பாள் வாசல் கோபுரக்கதவு, பிள்ளையார், முருகன் கொட்டகைகள் போடப்பட்டுள்ளன.

ஆன்னை அமுதசுரபி திருமதி யோகம்மா மாணிக்கம் அவர்களது உபயமாக லட்சக்கணக்கான ரூபா செலவில் ஆலயம் மின் அமைப்பு வசதி செய்யப்பட்டு மின் இயந்திரம் ஒன்றையும் உபயம் செய்து இருளில் இருந்த ஆலயத்தை

**டாக்டர் ஆ. பேரின்பநாதன்**

(தலைவர், மேற்படி தேவஸ்தான பரிபாலன தர்மகர்த்தாசபை)

கமைந்த வைரக்கல்லாலான சிவாலயத்தை அமைத்து-1948 இல் முதல் கும்பாபிடேகத்தையும் செய்தது-பொது மக்களதும் சுவாமிகளதும் உதவியுடன் சுவாமிகளது விருப்பப்படி பாணாவிடை அப்பனது பெயரும் 'பர்வத வர்த்தனி உடன் உறை இராமலிங்கேஸ்வரர்' என நாமகரணமிடப்பட்டது. இராமேஸ்வரம் போன்று. எனவேதான் ஈழத்து இராமேஸ்வரம் என்ற சிறப்புப் பெயரையும் இவ்வாலயம் பெற காரணமானது. இவ்வாலய எதிர்கால வளர்ச்சி இராமேஸ்வர ஆலய நிரந்தர மின்வசதி செய்து ஒளியேற்றப்பட்டுள்ளது. 78 ஆண்டுகளாக மரநிழலில் நடைபெற்ற அப்பர் குருபூசையும், அன்னதானமும், இனி மேலும் தொடரக் கூடாது என சபையினால் உணரப்பட்டு 100 அடி × 30 அடி அளவு கொண்ட அன்னதான மடத்தை ஸ்தாபித்தோம். மண் எடுப்பதில் ஏற்பட்டுள்ள தடை எம்மை அதனை நிறைவு செய்ய தடையாக்கி விட்டது. அடுத்த ஆண்டு அடியார்கள் அதன் பயனை நிச்சயம் எட்டுவார், அடுத்து கடந்த இரண்டு ஆண்டுகளாக இங்கு உருவாகி வருவது தீவுப்பகுதியிலேயே மிக உயரமான அழகிய சித்திரத்தேர். இதனைக்கூட இவ்வாண்டு வெள்ளோட்டம் விட அயராது உழைத்தோம்.



மரங்கள் ஒருசில பெறுவதற்கு ஏற்பட்டுள்ள தடை எமது திருப்பணியை பின்னடையச் செய்துள்ளது. எது எப்படியிருப்பினும் அடுத்த மகோற்சவத்திற்கு நிச்சயம் எம்பிரான் புதிய அழகிய சித்திரத் தேரிலே ஆரோகணித்து வருவார். மேலும் ஆலய கொடிக்கம்ப கவசமானது மிக அழகான முறையில் வடிவமைக்கப்பட்டு கொடியேற்ற உபயகாரர்களால் பூட்டப்பட்டுள்ளது. ஆலய முன்கதவினை அமரர் திரு. செ.மார்க்கண்டு (சோமசுந்தரம்) நினைவாக அன்னாரது அருமை குழந்தைகள் உபயம் செய்ய முன்வந்து வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருப்பதுடன் ஆலய எழுந்தருளியறை திரையினையும் நடேசர் ஆலய பளிங்குக்கல் பதிக்கும் உபயத்தினையும் திரு நமசிவாயம் காராளபிள்ளை அவர்கள் (சுவிஸ்) பொறுப்பேற்று வேலைகள்


தேசம் போற்றும் தேர்த்திருவிழா
நேசம் மிக்க நினைவுப் பெருவிழா

**K. A. ENGINEERS**

CIVIL MECHANICAL ELECTRICAL ENGINEERS AND CONTRACTORS

Vithanaiyar Illam, PUNGUDUTIVU

Office:- No. 142, Palaly Road,

Thirunelvely JAFFNA

ராமேஸ்வரம்

# டை சிவன் தேவஸ்தான


# ழா சிறப்பு மலர்

யே
த்தி
இவ்
பிட
ம்.

ஆரம்பிக்கப்படவுள்ளன. குறிப்பிட்ட வேலைகள் இவ்வாண்டு நிச்சயம் பூர்த்தியடைய இறைவழிபாட்டினை வேண்டுவதுடன். எமது

## சிவனுர்க்கு ஏற்ற அருட்பணி

சித்திரத் தேர்த் திருப்பணி ஓராண்டு காலமாக நடை



பெற்று வருகின்றது. இவ்வாண்டு பூர்த்தி செய்வதாக நினைத்தும் நாட்டுச் சூழ்நிலை இடந்தரவில்லை. அடுத்த

ஆண்டு இதனையும் பூரணமாக நிறைவுசெய்ய அன்பர்கள், ஆதரவாளர்கள் உதவிக் கரங்

களை நாடுகின்றேம்.

10 இலட்சம் ரூபா திட்டத்தில்சித்திரத் தேர்,தேர்முட்டி, வீதி அமைக்கும்பணியை இச்சபை பொறுப்பேற்றுள்ளது. அவற்றுக்கு

சுவிஸ்:- ஜெயக்குமார், ராஜகோபால்- 268220/—

பிரான்ஸ்:-
நா. மனேகரன் 77555/—

சுவீடன்:-
வி. மகாதேவன் 37033/68

டென்மார்க்:-
கே. சிறிஸ்கந்தராசா1000/—

ஜேர்மனி: -
ந. கோபால பிள்ளை15000/—
இ. கோணேஸ்வரமூர்த்தி 9324/=

சவுதி:-
ந. பாஸ்கர சிங்கம்2400/—
செ.சேதீஸ்வரன் 9350/—
பி. சுந்தரலிங்கம் 16350/—

ஃபரேன்:-
செ. பாவராஜ் 5000/=

கனடா:-
எஸ். மகேந்திரன் 6000/—

ஆகியோர் பட்டியல் மூலம் நிதி சேகரித்து அனுப்பியுள்ளார்கள். கொழும்பு, சுன்னுகம், புங்குடுதீவு வசூல் 104 500/- சென்ற ஆண்டு பத்திரிகை விளம்பர வகையில் 3750 -இதுவரையில் கிடைக்கப் பெற்றுள்ளோம். மேலும் ஆலயத்தில் அன்ன

தான மடவேலைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இத்திருப்பணிகள் துரிதமாக நிறைவுபெற ஆதரவு நல்குமாறு இறைவன்பேரால்வேண்டுகின்றேம்.

தற்கு
எமது
டைய
எப்
அடுத்த
நிச்ச
புதிய
தரிலே
வார்.
க்கப்ப
கான
ப்பட்டு
காரர்
ள்ளது.
அமரர்
(சோம
அன்னு
ள் உப
வேலை
கொண்
எழுந்
னையும்
ருக்கல்
னையும்
காராள
(சுவிஸ்)
லைகள்

அடுத்த பாரிய திருப்பணி ஆலய முன் கோபுரம் அமைப்பதாகும். எமது அரன்பணிகளுக்கு எல்லாம் வாரி வழங்கிய வெளிநாட்டைச் சேர்ந்த எமது அன்புக் குழந்தைகளுக்கும், எம் நாட்டவர்க்கும் தோளோடு தோள் நின்று உழைத்த தொண்டர்களுக்கும் இறை அருள் நிறைவதாக

**இ. வைத்திலிங்கம்**
(கிராமசேவையாளர் தேர்த்திருப்பணிச்சபை பொருளாளர்)

## வாழ்த்துச் செய்தி

எல்லையிலாப் புகழ்வாய்ந்த இராமேஸ்வரத்தை
ஈழத்தில் கண்டுவக்க இயற்றும் தொண்டு
நல்லவர்கள் நாட்டவர்கள் நாளும் போற்றும்
நற்பெரிய திருத்தொண்டு இதனைச் செய்யும்
வல்லமை சேர் சிவனடியார் தம்மை ஏத்தி
வளர்ஈழ இராமேஸ்வர பணியைச் செய்யும்
கல்லையுமே கனியாக்கும் தெய்வத் தொண்டர்
கவின் சபையை நாவாரப் போற்றுவோமே

**சித்தாந்த கலாநிதி க கணபதிப்பிள்ளை**

பற்பல புகழ் வாய்ந்த
பாணவிடப் பரனுர்க்கு
ஒப்பற்றதிருத்தேர்
உயர்வாகச் செய்வதற்கு
அற்புத நன்கொடை
அள்ளி அள்ளித்
தந்த அரனடியார்
அன்பர்க்கு நன்றி.


ஈழத்து இராமேஸ்வரத்தில் எழுந்தருளி அருள்பாலிக்கும்
பர்வதவர்த்தனி அம்பாள் சமேத இராமலிங்கேசுவரப்பெருமான் திருவடி போற்றி

புதிய டிசைன்களில் தரமான தங்கநகைகளைப் பெற்றுக்கொள்ள
நாடவேண்டிய நகைமாளிகை

**ஹப்பி ஜுவல்லறி**

உரிமை: A. உதயகுமார்
தங்கப்பவுண் நகை வியாபாரிகள்

118 கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்

பர்வதவர்த்தனி சமேத இராமலிங்கப் பெருமான்
பதம்தொழப் பழவினை போமே

புதிய டிசைன்களில் 22 கரட்டில்
தரமான தங்க நகைகளைப் பெற்றுக்கொள்ள
நாடவேண்டிய நகை மாளிகை

**நியூ கல்யாணி ஜுவல்லறி**

87, கன்னுதிட்டி ரேட் யாழ்ப்பாணம்

தேரேறிவரும் சிவனுர் பதம் தொழவே
தீவினையெல்லாம் நீருகிவிடுமே

**ஸ்ரீ கண்ணன் லொட்ஜ்**

பரமேஸ்வரா சந்தி திருநெல்வேலி
யாழ்ப்பாணம்

பாணவிடைச் சிவன் தேர் விழாக்காண
படர்ந்திடும் வினையாவும் தீரும்.

நவநாகரீக அழகு சாதனப் பொருட்களும்
பாதணிகளும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள
சிறந்த ஸ்தாபனம்

**கௌரி றேட் சென்ரர்**

5. ஆஸ்பத்திரி வீதி நவீன சந்தை
யாழ்ப்பாணம்

தேர்மீது எழில்காட்டும்
ஈழத்து இராமேஸ்வரனே
உற்றிடும் துயர் களைவாய்

**குலம் ஸ்ரோர்ஸ்**

பலசரக்கு மாளிகை

ஊரதீவு, புங்குடுதீவு

தேரேறித் திருவீதி வலம் வரும்
தெய்வக் காட்சி காண வாரீர்

**கே.எம். சண்முகம் & சன்ஸ்**

132, கே. கே. எஸ், வீதி
யாழ்ப்பாணம்

யாழ் கோட்டப் பிரிவில்

# தமிழ் மொழித்தினப் போட்டியில் வெற்றிபெற்ற மாணவர் விபரம்

யாழ். கோட்ட தமிழ் மொழித்தினப்போட்டி முடிவுகள் யாழ். கோட்டக்கல்வி அலுவலகத்திஞல் அறிவிக்கப் பட்டுள்ளது வாசிப்பு, எழுத்து, ஆக்கம், பாஓதல், இசை, நடனம், பேச்சு ஆகிய துறைகளில் முறையே முதல் மூன்று இடங்களையும் பெற்ரோர் விபரம் பின்வருமாறு.

பிரிவு. 1

வாசிப்பு-இ. காயத்திரி, சுண்டுக்குளி ம. கல்லூரி, பா. யூலியற் டில்ஷான் சென் பெனடிக்ற் வித், பா. தவஜே சன், இந்து ஆரம்ப பாடசாலை.

எழுத்து-சி. இருசாந்தஞ, சுண்டுக்குளி ம. கல்லூரி, ப. ஸ்ரீவாணி, கோண்டாவில் ம. வி, கு. விவாஞஜா, இந்து ம. ஆரம்ப பாடசாலை.

ஆக்கம்-ஸ்ரீ. சுமித்திரா, இந்து ம.ஆ. பாடசாலை, ச.உறமி பிரமிளா, கொழும்புத்துறை இ ம வித்தி, த.சுரேகா, கோண்டாவில் சி சி.த.ப. அ.தர்சினி, கைதடி முத்துக் குமாரசாமி ம. வி,

பாஓதல்-ம பிரபாகரன், கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயம், நா. மயூரன், ம சாலை வீரசிங்கம் ம.வி. ம விஜித்தா. இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை,

இசைக்குழு-இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை, சந்திரபுரம் ஸ்கந்தவரரோதய ம வி, புனித ஜோசப் வித்தியாலயம்,

நடனம்- திருநெல்வேலி இ.த.வி, நாவற்குழி ம.வி, மட்டுவில் கமாலாஜினி,

பிரிவு. 2

வாசிப்பு - பூ. மஞேரஞ்சினி, கைதடி விக்னேஸ்வரா வி, அ.ஜெயந்தினி, மிருசுவில் ரோ.க.வி, இ. விஸ்வவனிதாசன், இந்துக்கல்லூரி,

ஆக்சம்-ம.சுமதி, கொழும்புத்துறை இ ம.வி, க. தர்மசேகரம், கைதடி நவீல்ட் பாடசாலை, தி ஸ்ரீரங்கநந்தா, இந்து மகளிர் கல்லூரி,

பேச்சு-அ. ஸ்ரீகார்த்திகா, சுண்டுக்குளி மகளிர் .கல், இ.வைத்திலிங்கம், இந்துக் கல்லூரி, எம்.எஸ் என். சவரிமுத்து, சம்பத்திரிசியார் கல்லூரி,

பாஓதல் -ம . ஞானகாந்தன், புனித ஜோசப் வித்தி, சா. காயத்திரி, இளையதம்பி. இ. த.க.பா, பூ.மஞேரஞ்சிதம், கைதடி விக்னேஸ்வரா வித்தி,

இசைதனி-செளமியா சற்குணநாதன், சுண்டுக்குளி மகளிர் கல், க.கவிவல்லவன், நாவற்குழி ம.வித்தி, அலெக்சாண்டர் புனித சாள்ஸ் ம வி,

இசைக்குழு- கனகரட்ணம், மத் ம.வி, கோண்டாவில் இ. ம.வி, நாவாந்துறை, ரோ. க த பா சந்திரபுரஸ்கந்த,

பரதம்குழு-வேம்படி மகளிர் கல்,

பரதம் தனி- ஜோ. சிந்துஜா, சுண்டுக்குளி மகளிர் கல். கொடிகாமம் திருநாவுக்கரசு,

பிரிவு.3

கட்டுரை-க.மைதிலி, உசன் இராமநாதன் ம.வி, ச.குஞளினி, சாவகச்சேரி இ.கல், அமலதாஸ், கொழும்புத் துறை துரையப்பா வி.

ஆக்கம்-ச.குமுதினி, சாவகச்சேரி இ கல், க.ரஞ்சினிதேவி, கொக்குவில் இராமகிருஷ்ண மகளிர் வி, யோ. உறிமசுதா, வண்ணை வைத்தீஸ்வரா, வே.சிவராசா, வரணி ம.வி,

பேச்சு-பா.சபேசன், இந்துக் கல்லூரி யாழ், ப.ஜெயரூபி, கொக்குவில் இ கல், ஜே. பிரேமதாசா, புனித ஜோசப் வித்,

பாஓதல்-உசன் இராமநாதன் ம.வி, இந்துமகளிர் கல், புனித ஜேம்ஸ் மகாவித்தியாலயம்,

இசைதனி-க.சகுந்தலா, சாவகச்சேரி இ ம.வி, ம.சசியந்தி, சுண்டுக்குளி மகளிர் வித்தியாலயம், இ.தவமலர், கைதடி முத்துக்குமாரசாமி.ம.வி,

இசைக்குழு வேம்படி மகளிர் கல், சந்திரபுர ஸ்கந்தவரோதய, கனகரத்தினம் ம.ம. வித்,

பிரிவு.4

கட்டுரை-பொ.பகீரதி, கொடிகாமம் திருநாவுக்கரசு, ம.வி, பா.கீதாஞ்சலி, நாவற்குழி ம, வி, ச. சுகந்தினி, சாவகச்சேரி இந்துக்கல்லூரி,

ஆக்கம்-ப-நாமகள், இந்து மகளிர் கல்லூரி தி.துளசி, சுண்டுக்குளி மக.கல், அ.அரவிந்தன், இந்துக்கல்லூரி,

பேச்சு-பி.அம்பிகை, வேம்படி மகளிர் கல்லூரி, வே.ஜெகரூபன், இந்துக்கல்லூரி, போ. பகீரதி, கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி,

பாஓதல்தனி- இ. பிரசாந்தி, வேம்படி மக.கல்லூரி, வ.மதிலோஜினி, உசன் இராமநாதன் ம வி, சி தேவராணி, நாவற்குழி ம.வி,

இசை-கா.குகபரன், உசன் இராமநாதன், பு.சாமிளா, சுண்டுக்குளி மகளிர் ம வி. ஜீவலதா, கொக்குவில் இ.க,

திறந்தபோட்டி

கல்லியம்-ஜே. லூகினே, சென் ஜோசப் வித்தி,

வில்லுப்பாட்டுகுழு- கொடிகாமம் அரசினர் வித்தியாலயம், கோண்டாவில் இராமகிருஷ்ண ம.வி, நாவற்குழி ம.வி,

புல்லாங்குழல்-கே.நக்கீரன், கொக்குவில் இ.க,

நடனம்குழு-கன்னியர்மடம் ம.வி, கைதடி விக்னேஸ்வர வித்தி,

காவடி - மா. சத்தியகுமார், பெரியபுலம் ம.வி

நாடகம்-வேம்படி மகளிர் கல், கன்னியர்மடம் ம.வி, நாவற்குழி ம. வி,

இசைதனி-க.சத்தியா, நாவற்குழி ம வி,

இசைகுழு-நாவற்குழி ம வி,

விவாதம் - யாழ் இந்துக்கல்லூரி, யா இந்துமகளிர் கல்லூரி, யாழ் கனகத்தினம் ம. ம வி,

## சுவையான செய்திகள்

### கவனம்...தலைமுடி நரைக்கலாம்

திடீர் எனத் தலைமுடிகள் நரைக்குமா? கவலைப்பட்டால் மாத்திரம் அல்ல. கற்புள்ள பெண்களைச் சந்தேகித்தாலும் இப்படி நடக்கும் என்கிறது சரித்திரம். பவேரியடியூக் லுட்விக் தமது28 வயது மனைவி மீது ஐயம் கொண்டு அவளுக்கு மரண தண்டனை விதித்தான். அவள் நிரபராதி என்பதற்குச் சரியான சான்று கிடைத்த அக்கணமே டியூக்கின் தலைமயிர்கள் அனைத்தும் ஒரேயடியாக நரைத்துப் போயினவாம்.

### பனிச்சறுக்கல் உயிரைகாத்தது

ஸ்கையிங் எனப்படும் பனிச்சறுக்கு விளையாட்டுப் பற்றி அறிந்திருக்கின்ரோம். இந்தக் கலையின் உதவியால் 784 ஆண்டுகளுக்கு முன்னர் ஒரு மாபெரும் உயிர் மீட்கப்பட்டது. ஆம் நோர்வே மன்னர் 'ஹக்சன் சன்(1204—1263) இரண்டு வயதுக் குழந்தையாக இருந்தபோது உள்நாட்டுக் கலவரத்திஞல் ஆபத்து ஏற்பட்டது இதற்கென நியமிக்கப்பட்ட இரு மெய்க்காப்பாளர்கள் இந்த இரண்டு வயது இளவரசனை துணிகளால் நன்கு மறைத்துக்கொண்டு கடுங்குளிரில் 370 கிலோ மீற்றர் வரை சறுக்கிச் சென்று உயிரைக் காப்பாற்றினர்; உயிரை மீட்டனர். உண்மையான மெய்க்காவலர்,

### பேப்பர் வெயிட்டாக வைரம்

ஹைதராபாத்தின் ஆருவது நிஜாம் மன்னரிடம் 50 இலட்சம் டொலர் மதிப்புள்ள பதினெட்டரை கரெட் எடையுள்ள ஒரு வைரம் இருந்து வந்தது. அவரால் இந்த வைரம் பேப்பர் வெயிட்டாகப் பயன்படுத்தப்படடது. ஒருமுறை காணுமற்போன இந்த வைரம் 72 மாதங்களுக்குப் பிறகு 1911 ஆம் ஆண்டு ஒரு காலணியினுள் காணப்பட்டது. இந்த வைரம் கண்டு பிடிக்கபபட்டபோது மன்னர் இறந்துபோய் விட்டார். இதன் உண்மையான மதிப்பை அறியாத நிஷாம் இந்த வைரத்தைப் பேப்பர் வெயிட்டாகவே பாவிக்க நேரிட்டது.

### வி.போட்டி

விடுதலைப்புலி கேணல் மதியின் ஞாபகார்த்தமாக கீரிமலை நகுலேஸ்வரர் சன சமூகநிலையமும், மதி விளையாட்டுக் கழகமும் விளையாட்டுப் போட்டி ஒன்றை எதிர்வரும் 27ம் திகதி நடத்தவுள்ளன.

இதனையொட்டி மாட்டுவண்டிச் சவாரி, சைக்கிளோட்டப்போட்டி, நீச்சல் போட்டி என்பன நடைபெற ஏற்பாடாகியுள்ளது. கலை நிகழ்சிகளும் நடைபறும்.

### நிதி ஒதுக்கீடு

கொக்கட்டிச்சோலைகன்னன் குடாபகுதியிலுள்ள வீதிகளைப் புனரமைக்க இரண்டு கோடி ரூபா பணம் ஒதுக்கப்பட்டுள்ளது. திருத்த வேலைகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

### சிறுபோக நெற்செய்கை

மூதூர் பிரதேசத்தில் சிறுபோக நெற்செய்கை தொடங்கப்பட்டுள்ளது. கடந்த காலங்களை விட இத்தடவை மூதூர் பிரதேசத்தில் பெருமளவில் சிறுபோக நெற்செய்கைகளில் ஈடுபட விவசாயிகள் ஆர்வம் காட்டுகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

## முரசொலிக்கு வந்த கடிதம்

### ஆசிரிய இடமாற்றம் வழங்குவதில் சொந்த பந்தங்களுக்கு முன்னுரிமையா?

ஆசிரியர்
முரசொலி

கொழும்பு மாவட்டத்தில் இருந்து யாழ் மாவட்டத்திற்கு எனக்கு இடமாற்றம் வழங்கப்பட்டது யாழ் கல்வித் திணைக்களம் என்னை சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கு நியமித்துள்ளதாக அறிவித்தது அச்சடிக்கப்பட்ட பட்டியலிலும் எனது பெயரும் நான் கடமையாற்ற வேண்டிய பாடசாலையின் பெயரும் குறிப்பிடப்பட்டிருந்தது. பின்பு. 8-03-90-இல் சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்குச் சென்ற போது 07-93-90-ல் எழுதப்பட்ட இடமாற்றக் கடிதத்தை அப்பாடசாலை அதிபர் என்னிடம் தந்தார். அக்கடிதத்தில் சாவகச்சேரி மகளிர் கல்லூரிக்கு சென்று கடமை ஏற்கும்படி நான் கேட்கப்பட்டிருந்தேன்.

சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கு நியமிக்கப்பட்ட என்னை மகளிர் கல்லூரிக்கும் மகளிர் கல்லூரிக்கு நியமிக்கப்பட்டவரை சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கும் மாற்றம் வழங்கப்பட்டுள்ளது இது எனக்கு பெரும் வியப்பாக இருக்கிறது.

ஆசிரியர் இடமாற்ற நியமனத்தில் கல்வித் திணைக்களம் சொந்த பந்தங்களுக்கு இடம் கொடுக்கிறதா? புதிய கல்விப் பணிப்பாளர் இதனைக் கவனத்திற் கொண்டு இப்படியான நடவடிக்கைகள் இனி இடம் பெறுவதை தடுத்து நிறுத்துவாரா?

சரசாலை வடக்கு, எஸ். நகுல்ராஜா
சாவகச்சேரி

### ஊனமுற்ற உள்ளங்கள் சில ஏங்கி நிற்கும் நிலையில் இன்று

ஆசிரியர்
முரசொலி

ஆண்டவன் படைப்பில் அழகாய் பிறந்தநாம் எமதுவிதியெனும் சதியால் வயதெல்லையின்றிபலரும் பலவகையில்போலியோ வியாதியினுல்பாதிப்புற்றும், கட்புலன், செவிப்புலன், கை, கால் போன்ற அவயவத்தை இழந்தும் ஊனமுற்றநிலைக்குள்ளாஞேம் இந் நிலையில் இருந்தும் நாங்கள் கஷ்டத்தின் மத்தியிலும் பலவகையிலான மனத் தாக்கங்களையும் ஏற்றுக் கொண்டு கல்வி எமக்குதுணைநிற்குமெனும் நம்பிக்கையில் கல்வியைக் கற்று வந்தோம். அண்மையில் நடைபெற்ற பயிலுநர் ஆசிரியர் தெரிவின் போது தகுதி இருந்தும் நான் தவிர்க்கப்பட்டுள்ளேன். காலை இழந்த நான் பரதநாட்டியத்திற்காக விண்ணப்பித்திருந்தால் என்னை தவிர்த்துக்கொள்ளலாம் வாய்ப்பாட்டிசைக்காகவே நான் விண்ணப்பித்திருந்தேன், எனவே என் குறைகளைக் கூறி உரிமையைக் கேட்க மேலிடத்திற்கு முறையிடப் போன வேளையில் அன்றும் உள்ளம் உருகி ஊமையாகி திரும்பினேன், வேறொரு அன்னிய நாட்டிற்கு போய் இந்நிலையை அடையவில்லை. எம் சொந்த மண்ணிலே பெண் இனத்தாலே மனம் வேதனையை அடைந்தேன் இனியாவது இந்த அரசு சுற்றறிக்கையை ஏற்று தகுதியுடைய என்போன்ற அங்கவீனர்களின் எதிர்கால வாழ்விற்கு இந் நியமனத்தில் இடமளித்து உதவி புரிவார்களென நம்புகின்றேன்.

கோண்டாவில் சன்யா

## இன்றைய நிகழ்ச்சிகள்

### திருநெல்வேலியில்

திருநெல்வேலி, பல்கலைக் கழக ஒழுங்கையில் அமைந்துள்ள 'இவ்லின் இரத்தினம்' நிறுவனம் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு 'ஜேர்மனியின் மீள் ஒற்றுமையும். அது எதிர்நோக்கும் பிரச்சினையும்' என்னும் தலைப்பிலான கருத்தரங்கை நடாத்தவுள்ளது. யாழ். பல்கலைக்கழக புவியியற்றுறைத் தலைவர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை கட்டுரையைச் சமர்ப்பிப்பார்.

### திறமை

கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலய மாணவிகள் செல்வி தில்லைநாதன் திருமகள், செல்வி கோபாலகிருஷ்ணன் தர்மினி ஆகிய இருவரும் கடந்த ஆண்டு நடைபெற்ற ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சையில் திறமையாகச் சித்தியடைந்து கடந்த பத்தாண்டுகளில் இவ் வித்தியாலயச் சாதனைகளை முறியடித்துள்ளனர்.

இம் மாணவிகளின் சாதனையை வித்தியாலய அதிபர் திரு த. தங்கராசா பாராட்டியுள்ளார். (36)

### கை இழந்தவருக்கு கை கொடுக்க உங்களுக்கும் விருப்பமா?

கடந்த15-04-90முரசொலியில் 'முரசொலிக்குவந்தகடிதம்'பகுதியில் இடம் பெற்ற 'கை இழந்த எனக்கு கை கொடுகக யார் வருவார்?' என்ற தலைப்பில் வெளியான கடிதத்தைப் பார்த்த பெயர் குறிப்பிட விரும்பாத அன்பர் ஒருவர் 100 ரூபா பணத்தை வன்செயலில் கையிழந்த கொற்ருவத்தை வ. காந்தி மதிநாதனிடம் வழங்கும்படி முரசொலி அலுவலகத்தில் ஒப்படைத்துள்ளார். மேலும் யாராவது இவருக்கு உதவி செய்ய விரும்பிஞல் எமது அலுவலகத்தில் அதற்குரிய பணத்தை ஒப்படைத்தால் அதனை நாம் திரு. காந்தி மதிநாதனிடம் ஒப்படைப்போம்.

# ரமழான் சிந்தனைகள்

## சுவர்க்க மாளிகை கிடைக்க வேண்டுமா?

பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: 'நி்சயமாக தொழுகை; நோன்பு, தியானம் [திக்ரு] ஆகியவை அல்லாஹ்வுடைய வழியில் தர்மம் செய்வதை விட எழுநூறு மடங்கு அதிகமான பலனை நல்கிறது'

''நிச்சயமாக, சுவர்க்கத்தில் உள்ளிருந்து வெளியிலும் வெளியிலிருந்து உள்ளிலும் பார்க்கும் படியானமாளிகைகள் இருக்கின்றன என்று பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள் அப்பொழுது ஒரு அரபி எழுந்து நாயகமே! அது யாருக்காக? என்று வினவினர் அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள், நல்ல விதமாகப் பேசுபவருக்கும், உணவளிப்பவருக்கும், நேமமாக நோன்பு நோற்பவருக்கும், மக்கள் உறங்கும் பொழுது இரவில் தொழுபவருக்கும் ஆகும் என்று கூறினர்கள்,

பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள் நன்மையான காரியத்தை அறிவிப்பவர் அதனைச்செய்தவர்போலாவார்

# இன்று நாள் எப்படி?

மேடம்: தேடியவர் வருகை. பணவருவாய், உயர்பதவி உத்தமருறவு, சுகஜீவியம், புதுத்தொழில், சகோதரவழியுதவி.

இடபம்: வாக்குபலிதம், வாகனசுகம், வணிகர்கள் கடல் தொழில் இயந்திர தொழில் மூலம் நன்மை, புதுமனைச் சிறப்பு.

மிதுனம்: வாகன மாற்றம், பணவரவு, வாகனசுகம், உயர் பதவி, உத்தமர்களுறவு, சுகஜீவியம்.

கடகம்: வாகனஇலாபம். வணிகர்கள் இலாபம், தேடியவர் வருகை, விவாக நிட்சயம்

சிங்கம்: உடல் ரோகம், பணச்செலவு, இளைய சகோதரருதவி, வாக்குபலிதம், வணிகர்கள் இலாபம்.

கன்னி: பணவருவாய், சுகஜீவியம், எண்ணிய எண்ணம் நிறைவு, வாக்குபலிதம், இலட்சுமி கடாச்சம்.

துலாம்: புதுத்தொழில், பிதாவழியுதவி, வணிகர்கள் கடல் தொழில் செய்வோர் இலாபம், சுகஜீவியம்.

விருட்சிகம்: மங்களகாரிய நிறைவு, பணவரவு, வாகன சுகம், உயர்பதவி, உத்தமர்களுறவு, சுகஜீவியம்.

தனுசு: தேடியவர் வருகை, வாகனசுகம், வணிகர்கள் இலாபம். வாக்குபலிதம், உயர் பதவி, தேடியவர் வருகை.

மகரம்: சுகஜீவியம், வணிகர்கள் கடல்தொழில் செய்வோர் இலாபம், பணவருவாய், வாகனசுகம்.

கும்பம்: புதுத்தொழில், புகழ் தேடிவரும், கலைஞர்கள் கௌரவிக்கப்படல், தேடியவர் வருகை.

மீனம்: வாக்குபலிதம். வாகன சுகம், உயர்பதவி. உத்தமர்கள் வருகை, திடீர்பிரயாணம், சகோதரவழியுதவி.

★ யாழ் சோதிடர்
ச. அரியநாயகம்

# 'அபிவிருத்தியில் மக்கள் ஒத்துழைப்பும் அவசியம்'

''யாழ். நகர மக்களின் சுகாதாரம், குடிநீர், மின்சாரம், போக்குவரத்து என்பவற்றை மக்களுக்குப் பயன் உள்ள வகையில் சீர் செய்ய வேண்டியது மாநகரசபையின் பொறுப்பான கடமைகளாகின்றன. இந்த நடை முறைகள் சீராகவும், சிறப்பாகவும் இயங்குவதற்கு பொது மக்களும், மக்கள் நலன்விரும்பும் சேவையாளர்களும் பூரண ஒத்துழைப்பும், உதவிகளும் செய்து உதவ வேண்டியது அவசியமாகும்.''

கடந்த இரண்டு வருடங்களுக்கு மேல் ஆரம்பிக்கப்பட்டு செயற்படாதிருந்த நாயன்மார்கட்டுப் பகுதி யுனிசெப் தண்ணீர்த் திட்டத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு. வி பி. பாலசிங்கம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாயன்மார்கட்டு பாரதி சனசமூக நிலையத்தின் தலைவர் திரு வ. வேலாயுதபிள்ளை தலைமையில் நடந்த இவ் வைபவத்தில் ஆணையாளர் தொடர்ந்துபேசுகையில்: யுனிசெப் தண்ணீர்த் திட்டத்தின் கீழ் கடந்த இரண்டு வருடங்களுக்கு முன் ஆரம்பிக்கப்பட்ட இத்திட்டம் வன்செயல் காரணமாகத் தடைப்பட்டிருந்தது. இத்திட்டத்திற்கென பொருத்தப்பட்டிருந்த இயந்திரமும் களவாடப்பட்டது. இதனால் இத் திட்டத்தை உரியகாலத்தில் மக்களுக்குப் பயன்படுத்த முடியாத நிலை இருந்து வந்தது இன்று எமது பகுதிகள் சீரடைந்து அமைதி ஏற்பட்டுவரும் இக் காலகட்டத்தில் இது போன்ற செயலற்றிருந்த திட்டங்களை நாம் மக்கள் நலன் கருதி செயற்படுத்த முனைகின்றோம். இவற்றை சீரிய முறையில் பயன் உள்ள தாங்கி சிறப்பாக இயங்க வைக்க வேண்டிய பொறுப்பு பொதுமக்கள் கையில் அதிகமாகத் தங்கியுள்ளது என்றார்.

சிவசிறீ க.சாம்பசிவக் குருக்களின் விசேட பூசை நிகழ்ச்சிகளுடன் ஆரம்பமான இவ் வைபவத்தைடாக்டர் ஏ.உமாகாந்தன் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தார்.

இவ் வைபவத்தில் கலந்து கொண்ட யாழ் மாநகர சுகாதார வைத்திய அதிகாரி திருமதி கதிர்காமர் பேசுகையில் யாழ். நகர மக்கள் சுகாதார அபிவிருத்திக்கு நல்ல முறையில் ஒத்துழைப்பு வழங்கி வந்திருக்கின்றனர் என்றார்.

# வடக்கு, கிழக்கில் ஆலய சீரமைப்பு போதியளவு நிதியில்லையே

## மந்திரி தேவராஜ் விசனம்

வடக்கு, கிழக்கில் பாதிக்கப்பட்ட ஆலயங்களை மறு சீரமைக்க 2 கோடியே 40 இலட்சம் ரூபாதேவை என்னும் அமைச்சில் இத்தேவையை நிறைவுசெய்ய நிதியில்லை என்று இந்துசமய கலாசார, ராஜாங்க அமைச்சர் திரு. பி பி. தேவராஜ் தெரிவித்தார்.

தலவாக்கொல்ல ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தில் நடைபெற்ற சிறப்பு நிகழ்ச்சி ஒன்றில் அமைச்சர் இத்தகவலை வெளியிட்டார்.

அவர் அங்கு பேசுகையில்; ''எனது அமைச்சில் ஆலயங்கள் கட்டுவதற்கு நிதி இல்லை. தோட்ட நிர்வாகங்கள், ஆலயங்கள் அமைக்க மூன்றில் ஒரு பகுதியைத் தரவேண்டும். அந்த நிதியோடு உங்களது நிதியையும் திரட்டி ஆலயங்களை அமைக்க முன்வரவேண்டும்.

தேவாரம், திருவாசகம், ஆழ்வார்கள், நாயன்மார்கள் நிகழ்ச்சியும் ஆலயங்களில் இடம்பெறவேண்டும். சமயப் பிரசங்கங்கள், நாம சங்கீர்த்தனங்கள், பஜனைகள் போன்றவற்றிற்கு முக்கியத்துவம் அளிக்கவேண்டும். அதற்கு என்னாலியன்ற சகல உதவிகளையும் செய்வேன். நான் ஒரு கருவி. என்னைப் பயன்படுத்திக்கொண்டு இறைபணியைத் தொடருங்கள்'' என்றார்.

## சீரிய பண்புகள்

''ஆர்வம், சகிப்புத்தன்மை, பாசம், கடமை என்னும் சிறந்த பண்புகளை மாணவர்கள் விளையாட்டு மைதானத்திலேயே பெறுகின்றனர். பரீட்சையில் பெறும் சிறந்த பெறுபேறு போன்று விளையாட்டுப் போட்டிகளும் சிறந்த பேறுகளைக் கொடுக்கின்றன''.

இவ்வாறு யாழ் தெற்குக் கொத்தணி அதிபர் திரு. ஜி பி அல்பிரட் கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலய வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டிக்குத் தலைமை வகித்துப் பேசுகையில் குறிப்பிட்டார். வித்தியாலய அதிபர் திரு. தங்கராசாவும் பேசினார்.

நீலஇல்லம் முதலிடத்தையும், மஞ்சள் இல்லம் இரண்டாமிடத்தையும், சிவப்பு இல்லம் மூன்றாமிடத்தையும் பெற்றுக் கொண்டன. (36)

## ஒரே வாரம்...

-3ஆம் பக்கம் தொடர்ச்சி

தியை உறவினர் மூலம் பரந்தனுக்கு அனுப்பினோம் அங்கே இருந்து இவர்கள் மூவரும் வரவில்லை என்ற செய்தி கேட்டு அதிர்ச்சி அடைந்தோம். மரணச் சடங்கை முடித்து விட்டு தேடும் வேலையில் ஈடுபட நினைத்தோம்.

'கடவுள் மாதிரி இந்த ஐயா வந்ததால எங்கட பிள்ளையள் அழைத்துச் செல்ல முடிஞ்சுது, என்ர மருமகன் கார்மேகம் இறந்து விட்டதாக. எனக்கு இந்த ஐயாவுடன் வரும்போது தான் செய்தி கிடைத்தது.'

குருநாகல் பொலிசார் இத் தகவலைக்கொடுத்ததாகதெரிய வந்திச்சு இனித்தான் அவருடைய பிரேதத்தை எடுத்து அடக்கம் செய்யப் போறம் ...... என்றார் வேதனையோடு.

அவருக்கு எப்படி ஆறுதல் சொல்வது. சோதனை ஒன்று ...... இல்லையே ..........

கொழும்பு விவேகானந்தா மகாவித்தியாலயத்தில் கல்வி கற்கும் மாணவர்களான இந்த இரு சிறுவர்களும் தாய் தந்தையரைக் கண்டதும் புதிய உற்சாகத்துடன் கம்பீரமாகக் காட்சியளித்தனர்.

அவர்களுக்கு அவர்களை அழைத்து வந்த மச்சானுக்கு நடந்த சோகக்கதை புரியுமா.........? 'நெஞ்சை நெகிழ வைக்கும் சோகக்கதை...... புகையிரதத்தில் தொங்கியவாறு பயணம்செய்வர்களுக்கு ஒரு படிப்பினையாக அமையட்டும்.'

## இலங்கையில் மூச்சை விட்ட

# இந்திய ஜவான்கள் மூவரின் மனைவியருக்குப் புது வாழ்வு

இலங்கையில் நிகழ்ந்த யுத்தத்தில் இறந்த மூன்று இந்திய ஜவான்களின் மனைவியருக்கு புதுடில்லியில் மறுமணம் நடந்தது.

இராணுவ வீரர்கள் மனைவிமார் நல்வாழ்வுச் சங்கம் இராணுவத் தலைமைத் தளபதியின் மனைவி ஸ்வரூப்சர்மாவின் தலைமையில் இயங்கி வருகிறது. இச் சங்கத்தின் சார்பில் யுத்தத்தில் இறந்த இராணுவ வீரர்களின் மனைவிகளுக்கு வருடந்தோறும் மறுமணம செய்து வைக்கப்படுகிறது இந்த வகையிலேயே இ-த திருமணம் நடைபெற்றது. இவை இந்து மற்றும் சீக்கிய மதச் சடங்குகளுடன் நடத்தி வைக்கப்பட்டபின நீதிபதி முன்னிலையில்பதிவுசெய்யப்பட்டது.

# குக்கிராமத்தில் குரூரகொலை பங்களாதேஷில் பாதகம்

இன அடிப்படைப் பிரிவினைவாதிகள் குக்கிராமம் ஒன்றில் குடியேறிய 20 பேரைச்சுட்டுக் கொன்றதோடு மூவரைக் காயப்படுத்தியதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

பங்களாதேசத்தில் இச் சம்பவம் நிகழ்ந்துள்ளது 'சாந்தினி பாகினி' இயக்கத்தைச் சேர்ந்தவர்களே இக் கொலைகளைச் செய்தார்களென இராணுவகொமாண்டர் சஹாருன் ஆலம் தெரிவித்தாக 'ராய்ட்டர்' கூறுகிறது.

## வாகனேரிக் குளக்கதவு உடைவினால்

# நீர்ப்பாசன வசதியளிப்பது பாதிப்பு அடைந்துள்ளது

'தைமாதம் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினால் வாகனேரிக் குளத்தின் பிரதான கதவு உடைந்ததன்காரணமாக அக் குளத்தில் அரைமட்டத்துக்கே நீருள்ளது இதன் மூலம் 1500 ஏக்கருக்கு மாத்திரமே நீர்ப்பாசன வசதியளிக்க முடியும்'

மேற்கண்டவாறு மட்டக்களப்பு மாவட்ட நீர்ப்பாசன பிரதிப்பணிப்பாளர் திரு. ஏ. எஸ். மனோகரதாஸ் தெரிவித்தார்.

செலங்கடி நீர்ப்பாசன பிரிவுக்குட்பட்ட வெள்ள அழிவு வேலைகளுக்கும் பராமரிப்பு வேலைகளுக்கும் இவ்வருடம் 6,34,000 மாத்திரமே ஒதுக்கப்பட்டிருப்பதாகவும் சொன்ன அவர், 'மாதுறு ஓயாக் குளத்திலிருந்து நீர் பெறப்பட்டால் மாத்திரமே வாகனேரித்திட்டத்தில் மேலதிகக் காணிகளுக்கு நீர்ப்பாசனம் வழங்க முடியும்' என்றும் கூறினார்.

## ரஷ்ய - அமெரிக்க

# உச்சிமாநாட்டிற்கு குந்தகம் ஏற்படாது

சோவியத் யூனியனின் லிதுவேனியா மீது நிர்ப்பந்தம் மேற்கொண்டால் அமெரிக்காவினால் பதில் நடவடிக்கை மேற்கொள்ளப்படுமெனத் தெரிவிக்கப்படுகிறது.

சோவியத் யூனியனுடன் உள்ள நெருங்கிய பொருளாதாரக் கூட்டுறவு நடவடிக்கைகளைக் குறைக்க வேண்டுமென சில செனட்டர்கள் அபிப்பிராயம் தெரிவித்துள்ளனர்.

எனினும் லிதுவேனிய விவகாரம் மே மாதம் 30 ஆம் திகதி முதல் ஜூன் மாதம் 2-ம் திகதி வரை நடைபெறவுள்ள அமெரிக்க சோவியத் யூனியன் உச்சி மாநாட்டுக்கு எதிராக அமையாது என அறிவிக்கப்படுகின்றது.

# மனிதர் விளையாட்டுக்கு குதிரை இரையாவதா?

## ஜீவகாருண்ய சபை பாய்ச்சல்

விளையாட்டு என்ற பெயரில் குதிரைகள் கொல்லப்படுவதை உடன் நிறுத்த வேண்டும் என்று இங்கிலாந்து ஜீவகாருண்யசபை அரசாங்கத்தைக் கோரியுள்ளது.

சமீபத்தில் நிகழ்ந்த கிராண்ட தேசிய குதிரைப் பந்தயத்தில் கலந்து கொண்ட ஏழு குதிரைகள் இறந்ததையிட்டு பகிரங்க விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றும் இச் சங்கம் கேட்டுள்ளது.

வருடா வருடம் லண்டன் குதிரைப் பந்தயப் பருவ காலத்தில் கிராண்ட தேசிய பந்தயம் நடாத்தப்படுவது வழக்கம், உயர்ந்த வேலிகளையும், தடைகளையும், பள்ளங்களையும் தாண்டிக் குதிரைகள் வெற்றிக் கம்பத்தை அடையவேண்டும்.

# கண்டி தமிழ் மன்னனுக்கு தமிழகத்தில் நினைவு மண்டபம்

இலங்கையின்கடைசித்தமிழ் மன்னனுக்குத் தமிழ் நாட்டில் நினைவு மண்டபம் ஒன்று நிறுவப்படவுள்ளது.

வேலூரில் இம் மன்னனின் கல்லறை தற்போது அமைந்துள்ளது. இதனையே நினைவு மண்டபமாக மாற்ற நடவடிக்கை மேற் கொள்ளப் பட்டுள்ளது.

இதற்கென ஏழு இலட்சம் ரூபா செலவிடப் படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இம் மண்டபம் அமைப்தற்கான அனுமதியைத் தமிழ் நாடு அரசாங்கம் வழங்கியுள்ளதாக நேற்றுத் தெரிவிக்கப்பட்டது

இலங்கை கண்டியின் கடைசித்தமிழ் மன்னனாக ஆட்சி புரிந்தவன் ஸ்ரீவிக்கிரமராஜசிங்கன் என்பது குறிப்பிடத்தக்கது.

## வடமராட்சி...

போது யாழ்ப்பாணத்திலிருந்த தலைவர் பிரபாகரன் செல்லையில் இருந்த என்னிடம் தொடர்பு கொண்டதைத் தொடர்ந்து நான் டில்லியிடம் ஆயுத உதவி குறித்துப் பேசினேன் ஆனால் டில்லி உதவ மறுத்துவிட்டது.

புலிகள் உங்களைக் காப்பாற்ற மாட்டார்கள் நாங்கள் தான் வரவேண்டும் எனத்தமிழ் மக்களுக்கு க்காட்டவேஇந்தியாஇப்படி நடந்தது.

### இந்தியப்பயணம் கறுப்புப்பூனைக்காவல்

பிரபாகரன் யோகி திலீபன் நான் நால்வரும் கெலி மூலம் இந்தியா கொண்டு செல்லப் பட்டு ஓர் அறையில் வைத்து நான்கு புறமும் கறுப்புப்பூனைப் படையால் காவல் காக்கப்பட்டோம் வெளித்தொடர்பு துண்டிக்கப்பட்டது.

இந்தியத்தூதர் டிக்சிற், 'ரோ அதிகாரிகள் எம்மிடம் வந்து இலங்கை இந்தியஒப்பந்தத்தை காட்டி அதை அங்கிகரிக்க எமக்கு ஒரு மணிநேரம் அவகாசம் தரப்பட்டதுநாற்பதாண்டு காலப் போராட்டத்தின் பின் ஒப்பந்தத்திற்குஒரு மணிநேரத்தில் அங்கிகாரம் தரவேண்டுமெனக் கோரப்பட்டது.

### பயமுறுத்தல்

பிரபா ஒப்பந்தத்திற்பல ஏற்றுக் கொள்ள முடியாத அம்சங்களைக் காட்டி ஏற்க மறுத்தார். ஒப்பந்தம் ஏற்கப் படா விட்டால் ஆறு மாதத்திற்கு அல்லது ஆறு வருடத்திற்கு வெளியே செல்ல முடியாது என டிக்ஸிற் கூறினர்

### எம். ஜி. ஆர் சந்திப்பு

அண்ணை நீங்கள் எந்த காரணத்தைச் சொன்னாலும் தமிழ் மக்களின் நலனுக்கு எதிரான இவ்வொப்பந்தத்தை ஏற்கமுடியாது எனபிரபாகரன் எம் ஜி.ஆரிடம் தெரிவித்தார். "தம்பி நீ எடுக்கும் முடிவை நானும் ஆதரிப்பேன்" என எம் ஜி,ஆர் கூறினர்.

இதைத் தொடர்ந்து இரவு பன்னிரண்டு மணியளவில் ராஜீவை சந்திக்க எம்மை கூட்டிச் சென்றனர்,

### ராஜிவ் பிரபாவை கட்டி அணைத்தார்

பிரபாவைக்கண்டதும் ராஜிவ் அவரை சுட்டித்தழுவி நீ மாபெரும் வீரன் உம்மை பற்றி கேள்விப்பட்டுள்ளேன் பெருமைப்படுகிறேன் என்றார்.

ஒப்பந்தத்தின் குறைபாடுகளை பிரபாகரன் விளக்கிய போது ஒப்பந்தத்தை எதிர்க்க வேண்டாம் சிங்களவர்களுக்கு சந்தர்ப்பம் அளிப்போம். இதை சிங்களவர் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். உங்கள் தமிழீழக் கோரிக்கையை நாம் ஆதரிக்கிறோம், ஆயுதங்கள் ஒரு சிலவற்றை மட்டும் கொடுத்தால் போதும் என்றார்.

இதை அடுத்தே நாம் திரும்பினோம் சில ஆயுதங்களை ஒப்படைத்தோம் வாக்குறுதிக்காக காத்திருந்தோம் இந்திய இராணுவம் குவிக்கப்பட்டது நாம் எதிர்த்தோம்,

இந்தியப்படைகள் உங்கள் எல்லைகளை காக்கவே வந்தவர்கள் அஞ்சவேண்டாம் என எமக்கு இந்தியாவால் கூறப் பட்டது, இவ்வாறு பாலசிங்கம் கூறினர்,

# காலமானர்

## கந்தையா இராசையா முதலி

திருநெல்வேலி கிழக்கு கென்னடி வீதியைச் சேர்ந்த கந்தையா இராசையா முதலி (முன்னுள் தபால் பகுதி உத்தியோகத்தர்) 19 4.90-ல் காலமானர் அன்னார் தவமணியின் அன்புக் கணவரும், சண்முகநாதன் கிராம சேவையாளர் அரியாலை மேற்கு) குலமணி ஆகியோரின் அன்புத் தந்தையும், க. சண்முகநாதன் (மின்சார ஒப் பந்தகாரர்) புஸ்பராணி (Chinese Dragon restaurant 168, ரெம்பில் ரோட்) ஆகியோரின் மாமனாரும், கபிலன், பிரசன்ன, பிரதாப், காயத்திரி ஆகியோரின் பேரனுமாவார். அன்னாரின் பூதவுடல் 20.4 90 வெள்ளிக்கிழமை இன்று தகனக்கிரியைக்காக அன்னாரின் இல்லத்தில் இருந்து 3 30 மணிக்குச் செம்மணி மயானத்திற்கு எடுத்து செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார். உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி பணிவுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:

இ. சண்முகநாதன்

(கிராமசேவையாளர்)

04198

# தட்டெழுத்தாளர்களுக்கு வட கிழக்கில் பற்றுக்குறை

வடக்கு கிழக்குப் பகுதி அரச அலுவலகங்களிலும், அரச கிளைக்காரியாலங்களிலும் தமிழ், ஆங்கில தட்டெழுத்தாளர்கள் பற்றுக்குறை நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கொம்பியூட்டர் அரச அலுவலகங்களில் அறிமுகமாகி வருவதாற் பல தட்டெழுத்தாளர்கள் இவ்வேலையில் சேர பின்நிற்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

யாழ். மாவட்டத்தின் பல அரச அலுவலகங்களில் கூடுதலான அளவு தட்டெழுத்தாளர்கள் பற்றுக்குறை ஏற்பட்டுள்ளது. இதனுற் பல வேலைகள் ஸ்தம்பிதமடைந்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. [03]

## மணவியை...

கணக்கான மக்கள் இவ்விழாவில் கல்ந்துகொண்டவர்.

மேலும் இவ்விழாவில் தமிழீழ விடுதலைப் புலிகளின் தென்மராட்சி அரசியல் பொறுப்பாளர் திரு, பாப்பா பேசுகையில் விடுதலைப் புலிகளின் கரங்களை பலப்படுத்த சகலரும் முன்வர வேண்டும். எமது சுயநிர்ணய உரிமையை நாம் ஒற்றுமையாக சேர்ந்து வென்றெடுக்க வேண்டும் என்று குறிப்பிட்டார்.

வடமராட்சி அரசியல் பொறுப்பாளர் திரு. குணம் பேசுகையில் அன்னை பூபதியின் வழியில் அனைத்து தமிழ் மக்களும் போராட்டத்திற்கு முன்வரவேண்டும் என கூறினர்.

தீவக அரசியல் பொறுப்பாளர் திரு. காஸ்ரோ பேசுகையில் கடந்தகாலப் போராட்டத்தில் 1329 போராளிகளும் 25 ஆயிரத்திற்கு மேற்பட்ட மக்களும் மரணித்துள்ளனர் இவர்களின்இலட்சியப் பாதையில் நாம் தொடர்ந்து முன்னேறுவோம் என்று உறுதி பூணுவோம். எனக் குறிப்பிட்டார்.

வலிகாமம்அரசியல்பொறுப்பாளர் ஆஞ்சநேயர் பேசுகையில் தமிழீழவிடுதலைப்புலிகளே தமிழ் மக்களின் நம்பிக்கையான பிரதிநிதிகள் என்பதை நாம் நிரூபித்து விட்டோம். அரசியல் ஆயுத ரீதிகளில் முழுமை பெற்ற அமைப்பாக நாம் முன்னேறி வருகின்றோம். என்று தெரிவித்தார்.

விடுதலைப்புலிகளின் யாழ் மாவட்ட மாணவர் பிரிவுப் பொறுப்பாளர் செல்வி பாரதி பேசுகையில் பல நாடுகளில் மாணவர்களே விடுதலைப்போராட்டத்தை ஆரம்பித்து நடாத்தி வருகின்றார்கள் ஆனல் எமது விடுதலைப்போராட்டத்தில் மாணவர்களின் பங்களிப்பு மிகவும் குறைவாகவே உள்ளது என்றார்.

விடுதலைப்புலிகள் மகளிர் முன்னணிப்பொறுப்பாளர் செல்வி மாலினி பேசுகையில் நம்பிக்கைத் துரோகிகளையும் நமது உல்லாதிக்க வெறிக்கு எம்மை ஆட்படுத்த முயன்ற சக்திகளையும் விடுதலைப்புலிகள் வெற்றிகரமாக முறியடித்து இன்று மக்களின் முன் நிற்கின்றார்கள் என்றார்,

## எழுச்சிப்புயலே எழுந்துவீசு!

இருந்திருந்து பொழிந்தாரே
குண்டு! – நம்
இதயத்தை யார் மீட்டார்,
கண்டு?
போராட்டம் எமக்கெல்லாம்
தொண்டு! — உயர்
பொற்காலம் வரச் செய்வோம்
கொண்டு!

இனியரும்பும் ஈழமலர்
மொட்டு! – அதை
இதயத்தில் வைத்து விடு,
பொட்டு!

— பாரதிசீலன்

### விடுதலைப் புலிகள் மகளிர்

# முன்னணிக் கிளை அமைப்பு அம்பாறையில் ஜரூர்

அம்பாறை மாவட்டத்தில் உள்ள சகல தமிழ் முஸ்லீம் கிராமங்களிலும் விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் மகளிர் முன்னணிக் கிளைகள் அமைக்கப்படவுள்ளன.

இதன் முதற்கட்டமாக வீரமுனை, நிந்தவூர், அட்டப்பள்ளம், ஒழுவில்,மல்வத்தை,கிராய்கேணி, குருந்தயடி, பாண்டிருப்பு, கல்முனை. காரைதீவு ஆகிய கிரமங்களில் இக்கிளைகள் தற்போது அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படவுள்ளன.

# கொழும்பில் பெரும் மழை கரையோரப் பகுதியில் வெள்ளம்

தொர்ந்து பெய்த மழையினல் கொழும்புநகரமும் அதன் சுற்றுப்புறப்பகுதிகளும் பெரும் பாதிப்புகளுக்கு உள்ளாகியுள்ளன.

வீடுகள் உட்பட பலஇடங்கள் நீரில் மூழ்கியுள்ளதோடு போக்குவரத்துக்களுக்கும் தடை ஏற்பட்டுள்ளது வீசிய புயற் காற்றினல் நகரில் பல கட்டிடங்கள் உடைந்ததோடு மரங்களும் முறிந்து வீழ்ந்துள்ளன.

இக்க நேரத்தில் களனி ஆற்றில் நீர் மட்டம் உயர்ந்து வருகிறதெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.இதனல் ஆற்றங்கரையில் வசிப்பவர்கள் வெளியேறுமாறு கேட்கப்பட்டுள்:னர்

## வட கிழக்கு

மைப்பு கூட்டத்தில் இவர்கள் கலந்து கொள்வார்கள்.

இக்கூட்டத்திற்கு புனர் வாழ்வு புனரமைப்பு அமைச்சர் திரு ஏ,எம்.எஸ்.அதிகாரியும் கலந்து கொள்ளவுள்ளார்.(03)

## செட்டிக்குளம்...

தினேஷ் மாவட்ட பொலிஸ் உயரதிகாரிகளுடன் கலந்து பேசியதையடுத்து இதனை மூட இணக்கம் காணப்பட்டதாக அறிய வந்துள்ளது.

திருமதி அன்ரன் பாலசிங்கம் பேசுகையில் தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தை புரியாமல் போராட்டத்தை புறக்கணித்த இந்திய அரசின் அலட்சிய போக்கும் வரட்டுக் கௌரவவுமே இங்கு ஒருமகோன்னதமான விடுதலைப் புரட்சிக்கும் உயிர் தியாகத்திற்கும் ஊக்கம் கொடுத்துள்ளன, ஒரு உயர்ந்த தேசிய விடுதலைப் போராட்டத்தில் பெண்களின் பங்கு மூக்கியமானது அதன் உச்சக்கட்ட வடிவமே அன்னை பூபதி என்றார்.

## மேலும் 1500...

ஏற்பாடு செய்திருந்த நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், இந்திய வம்சாவளித்தமிழர் 150 பேர் முதன் முறையாக பொலிஸ் இலாகாவில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர்' என்றும் அவர் சொன்னர்

இந்திய வம்சாவளியினர் இரண்டரை இலட்சம் பேருக்குக் வாக்குரிமை வழங்கப்பட்டுள்ளது மேலும் 5 இலட்சம் பேருக்குக் கிடைக்கவுள்ளது'' என்றும அவர் கூறினர்.

★ பெயர்ப்பலகைகள் (NAME BOARDS)
★ ஸ்ரிக்கர் தயாரிப்பு
★ ஓவிய வேலைகள்
★ மற்றும் வர்த்தக விளம்பர ஓவியங்களும்
குறித்த தவணையில் பெற
லங்கா கொமேர்ஷல் ஆட்டிஸ்ற்ஸ் (மேகலா கலையகம்)
108/1. துரைராசா கட்டிட மேல்மாடி,
ஸ்ரான்லி வீதி. (மக்கள் வங்கி முன்பாக) - யாழ்ப்பாணம்
04194

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ்,[பிறைவேட்]லிமிற்றெட் சிறுவனத்தினரால் யாழ்ப்பாண ஸ்ரான்லி வீதி 62ஏ இலக்கத்திலுள்ள அச்சகப் பிரிவில் 20.04.1990ல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது